# <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 07–ஆம் நாள், வியாழக்கிழமை

**<u>I.A. No. 02 of 2023 in O.S. No. 93 of 2010</u>**
**<u>(CNR No. TNSA13-000077-2010)</u>**

மதி (எ) பெரியசாமி .. மனுதாரர் / பிரதிவாதி

எதிராக

சட்டம்பிள்ளை .. எதிர்மனுதாரர் / வாதி

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 16.07.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. V. குமரவேல் அவர்களும், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. ராமமூர்த்தி அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>உத்தரவுரை</u>

மனுதாரர் / பிரதிவாதி, அசல் வழக்கில் தனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையை திருத்தம் செய்ய அனுமதிவேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

*.. 2 ...*

2. **<u>மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>** மனுதாரர் / பிரதிவாதி வழக்கு விவரங்களை வழக்கறிஞருடன் ஆலோசித்தபொழுது, தனது பதிலுரையில் In fact is a Prormboke Land and not even a common cart–track என்பதற்கு பதிலாக In fact it is a Patta land and not a poromboke or even a common cart–track என்று உள்ளது குறித்து மனுதாரர் / பிரதிவாதிக்கு தெரியவந்தது. மேற்படி வாக்கியம் தனது கட்சியை தெளிவுபடுத்தாமல் குழப்பமான நிலையை உருவாக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே, அதனை மனுவில் கண்டவாறு திருத்தம் செய்யவேண்டியது அவசியமாகும். இல்லையென்றால் மனுதாரர் / பிரதிவாதிக்கு பெருத்த கஷ்டநஷ்டம் ஏற்பட்டுவிடும். எனவே, வழக்கின் பதிலுரையை திருத்தம் செய்ய அனுமதிவேண்டி மனுதாரர் / பிரதிவாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. **<u>எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>** மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை எதிர்மனுதாரர் / வாதி மறுத்துள்ளார். மேலும், பதிலுரையை திருத்தம் செய்வதற்கான முறையான காரணம் எதுவும் மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கவில்லை. மனுதாரர் / பிரதிவாதி வழக்கு விவரங்களை அவரது வழக்கறிஞருடன் ஆலோசித்தபொழுதுதான் அவரது பதிலுரையில் In fact is a Prormboke Land and not even a common cart–track என்பதற்கு பதிலாக In fact it is a Patta land and not a poromboke or even a common cart–track என்று உள்ளது என்பது தெரியவந்ததாக கூறுவது நம்பும்படி இல்லை. மேற்படி வாக்கியம் வழக்கில் குழப்பமான நிலையை உருவாக்கும் என்று மனுதாரர் / பிரதிவாதி கூறுவது அடிப்படை ஆதாரமற்றது. பதிலுரையை திருத்தம் செய்வதற்குண்டான தேவை ஏற்படவில்லை. அசல் வழக்கு கடந்த 13 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. மனுதாரர் / பிரதிவாதி

.. 3 ...

கோரியவாறு பதிலுரையை திருத்தம் செய்தால் வழக்கின் தன்மையே முற்றிலும் மாறிவிடும். இதனால் எதிர்மனுதாரர் / வாதிக்கு ஈடுசெய்ய முடியாத கஷ்டநஷ்டம் ஏற்பட்டுவிடும். எனவே, மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

4. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

*மனுதாரர் / பிரதிவாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?*

5. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. **தீர்வு :**

1) மனுதாரர் / பிரதிவாதி தனது மனுவில், வழக்கு விவரங்களை வழக்கறிஞருடன் ஆலோசித்தபொழுதுதான் தனது பதிலுரையில் In fact is a Prormboke Land and not even a common cart–track என்பதற்கு பதிலாக In fact it is a Patta land and not a poromboke or even a common cart–track என்று உள்ளது குறித்து தெரியவந்ததாகவும், மேற்படி வாக்கியம் தனது கட்சியை தெளிவுபடுத்தாமல் குழப்பமான நிலையை உருவாக்கும் என்றும், எனவே, அதனை மனுவில் கண்டவாறு திருத்தம் செய்யவேண்டியது அவசியம் என்றும் கூறியுள்ளார். மாறாக எதிர்மனுதாரர் / வாதி தனது எதிருரையில், பதிலுரையை திருத்தம் செய்வதற்கான முறையான காரணம் எதுவும் மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கவில்லை என்றும், மனுதாரர் / பிரதிவாதி வழக்கு விவரங்களை அவரது வழக்கறிஞருடன் ஆலோசித்தபொழுதுதான் அவரது பதிலுரையில் In fact is a Prormboke Land and not even a common cart–track என்பதற்கு பதிலாக In fact it is a

*.. 4 ...*

Patta land and not a poromboke or even a common cart–track என்று உள்ளது என்பது குறித்து தெரியவந்ததாக கூறியுள்ளது நம்பும்படி இல்லை என்றும், மேற்படி வாக்கியம் வழக்கில் குழப்பமான நிலையை உருவாக்கும் என்று மனுதாரர் / பிரதிவாதி கூறியுள்ளது அடிப்படை ஆதாரமற்றது என்றும், அசல் வழக்கு கடந்த 13 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது என்றும், மனுதாரர் / பிரதிவாதி கோரியவாறு பதிலுரையை திருத்தம் செய்தால் வழக்கின் தன்மையே முற்றிலும் மாறிவிடும் என்றும், இதனால் எதிர்மனுதாரர் / வாதிக்கு ஈடுசெய்ய முடியாத கஷ்டநஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும், எனவே, மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

2) அசல் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், மனுதாரர் / பிரதிவாதி அவரது வழக்கறிஞருடன் வழக்கு குறித்து ஆலோசனை செய்த சமயத்தில்தான் In fact it is a Prormboke Land and not even a common cart–track என்பதற்கு பதிலாக In fact it is a Patta land and not a poromboke or even a common cart–track என்று உள்ளது என்பது குறித்து தெரியவந்துள்ளது. எனவேதான் மேற்படி வாக்கியத்தை திருத்தம் செய்வதற்காக மனுதாரர் / பிரதிவாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வாக்கியத்தை திருத்தம் செய்வதன் மூலம் வழக்கின் தன்மை எவ்விதத்திலும் மாறுபடாது. மேலும், எதிர்மனுதாரர் / வாதிக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது. எனவே, இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. முடிவாக, மனுதாரர் / பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு

.. 5 ...

செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 07–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2025.08.07 18:23:17 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**<u>மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள் :</u>** இல்லை

**<u>மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் / வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>** இல்லை

**<u>நீதிமன்ற சாட்சிகள்</u> :** இல்லை

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> :** இல்லை

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2025.08.07 18:23:28 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**மு.மா.உ.நீ., (மு.கூ.பொ.) ஆத்தூர்.**

**இ.ம.வ. எண் 2/2023**

**----------------**

**அ.வ. எண் 93/2010**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 07.08.2025

இ.ம.வ. எண் 2/2023 **in** அ.வ.எண்.93/2010